Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

நடுநிலை நாளிதழ்
PRGI NO: TNBIL/25/A3556
ISO : 9001:2015; QT-57977/1125

செய்தியாளர்கள் தேவை


தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
DHINATH DHALAM Tamil & English daily Paper
ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 137 | வியாழக்கிழமை Thursday | 19.03.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு



சென்னை: திமுக கூட்டணியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு செய்து ஒப்பந்தம் கையெழுத்தானது. குறைந்த தொகுதியில் போட்டியிடுவது எங்கள் கட்சியை சோர்வடைய செய்யாது என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் சட்டப் பேரவை தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், திமுக தனது கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீட்டுப் பேச்சுவார்த்தையை நடத்தி வருகிறது. கட்சியின் பொருளாளர் டி.ஆர். பாலு தலைமையில் 7 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டு நடைபெற்று வரும் பேச்சுவார்த்தையில், காங்கிரஸுக்கு 28 தொகுதிகள், மதிமுகவுக்கு 4, கொமதேக, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சிகளுக்கு தலா 2 தொகுதிகள் இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், திமுக கூட்டணியில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தொகுதிகள் ஒதுக்கீடு செய்வதில் தொடர்ந்து இழுபறி நீடித்து வந்தது.

இந்த நிலையில் சென்னை தேனாம்பேட்டையில் உள்ள திமுக தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் வீரபாண்டியன் தலைமையிலான பேச்சுவார்த்தை குழு, திமுக தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க ஸ்டாலினை இன்று சந்தித்தனர். இந்த சந்திப்பின்போது, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கீடு செய்வது என்ற உடன்படிக்கை கையெழுத்தானது.

அதனைத் தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் வீரபாண்டியன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், "நூற்றாண்டு கால இயக்கமான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, 5 இடங்களில் திமுக தலைமை கூட்டணியில் போட்டியிடுவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. கடந்த தேர்தலில் 6 தொகுதிகளில் போட்டியிட்டோம். அதனை விட கூடுதலாக போட்டியிட வேண்டும் என கேட்டோம். அதற்கான தார்மீக உரிமை கம்யூனிஸ்ட் கட்சிக்கு இருக்கிறது. திமுக கூட்டணியில் பல கட்சிகள் இணைந்திருப்பதால் முதலமைச்சர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளோம்.

குறைந்த தொகுதியில் போட்டியிடுவது எங்கள் கட்சியை சோர்வடைய செய்யாது. பேச்சுவார்த்தையின் போது திமுகவினர் ஒருபோதும் கட்டளையிடும் வகையிலோ அல்லது சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்படும் வகையிலோ நடந்து கொள்ளவில்லை. எங்கள் கூட்டணியின் குறியே பாஜகவை வீழ்த்துவது தான்" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "நடிகர் ரஜினிகாந்த் குறித்து தவெக தலைவர்களில் ஒருவரான ஆதவ் அர்ஜுனாவின் கருத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம் தெரிவித்துக் கொள்கிறது. திமுக எப்போதும் யாரையும் மிரட்டியது இல்லை, பாஜகதான் அதன் கூட்டணி கட்சிகளையும் மிரட்டும்" என்று கூறினார்.

திமுக கூட்டணியில் தற்போது வரை ஒப்பந்தம் கையெழுத்தான கட்சிகளின் விவரம்

காங்கிரஸ் –28

மதிமுக – 4 (3 உதயசூரியன், 1 தனி சின்னம்)

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் – 2

மனிதநேய மக்கள் கட்சி – 2 (உதயசூரியன்)

கொ.ம.த.க –2 (உதயசூரியன்)

சிந்திய கம்யூனிஸ்ட் கட்சி – 5

இதுவரை 43 தொகுதிகளை கூட்டணி கட்சிகளுக்கு திமுக ஒதுக்கீடு செய்துள்ளது. 43 தொகுதிகளில் 7–ல் கூட்டணி கட்சிகள் திமுகவின் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட உள்ளன

# வாக்களிக்க12 மாற்று ஆவணங்களை பட்டியலிட்டது தேர்தல் ஆணையம்



சென்னை:

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள் இந்திய தேர்தல் ஆணையம் பட்டியலிட்டுள்ள மாற்று புகைப்படத்துடன் கூடிய 12 ஆவணங்கள் காண்பித்து வாக்களிக்கலாம் என்று மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இது குறித்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: நடைபெறவிருக்கின்ற, 2026–ம் ஆண்டிற்கான சட்டப்பேரவைத் தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் ஆணையிட்டுள்ளது. அதன்படி, *ஆதார் அட்டை, * மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை, * புகைப்படத்துடன் கூடிய வங்கி, அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், * தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை, * ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை, * ஓட்டுநர் உரிமம், * வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN Card), * தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை, * இந்திய கடவுச் சீட்டு, புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், * மத்திய, மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்கள், வரையறுக்கப்பட்ட பொது நிறுவன ங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், * நாடாளுமன்ற, சட்டமன்ற, சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை மற்றும் * இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை ஆகியவற்றை வாக்களிக்க பயன்படுத்தலாம்.

வாக்காளர் பட்டியலில் வாக்காளரின் வரிசை எண்ணை அறிந்து கொள்வதற்காக புகைப்பட வாக்காளர் சீட்டிற்கு பதிலாக வாக்காளர் தகவல் சீட்டினை அச்சிட்டு வழங்க இந்திய தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

வாக்குச் சாவடியின் பெயர், வாக்குப் பதிவு நாள், நேரம் போன்றவை இடம் பெற்றிருக்கும். மாவட்ட தேர்தல் அலுவலரால் வாக்குப் பதிவு நாளுக்கு ஐந்து (5) நாட்களுக்கு முன்னர் அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் தகவல் சீட்டு விநியோகிக்கப்படும். வாக்குச் சாவடியில் வாக்காளர் தகவல் சீட்டு அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஆவணமாக ஏற்றுக்கொள்ளப்படாது.

ஒரு வாக்காளர் வேறொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்பாரேயானால் அந்த அடையாள அட்டையையும் இந்திய தேர்தல் ஆணையம் காட்டும் ஆவணமாகப் பயன்படுத்தலாம். ஆனால் அந்த வாக்காளருடைய பெயர் அந்த வாக்குச்சாவடிக்குரிய வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

வாக்காளர் பட்டியலில்பெயர்இடம்பெற்றிருந்தால் மட்டுமே...

அதேவேளையில், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட மேற்கூறிய எந்த ஒரு அடையாள ஆவணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒரு வாக்காளர் தனது வாக்கைச் செலுத்தி விட முடியாது. அவருடைய பெயர் வாக்குச் சாவடிக்கு அனுப்பப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையைச் செலுத்த தகுதியுடையவர் ஆவார் என்று தெளிவுபடுத்தப்படுகிறது. 1950ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 20 A–ன் கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள், அவர்களின் கடவுச் சீட்டிலுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் அசல் கடவுச் சீட்டின் அடிப்படையில் மட்டுமே (வேறெந்த அடையாள ஆவணமும்அல்லாது) அவர்களின் அடையாளம் வாக்குச் சாவடியில் மெய்ப்பிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்படுகிறது. இவ்வாறு மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி கூறியுள்ளார்.

# விண்வெளியில் பழுதான நேவிக் செயற்கைக்கோளின் அணு கடிகாரம்



இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையத்தால் கடந்த 2013ஆம் ஆண்டு விண்வெளியில் நிலைநிறுத்தப்பட்ட இந்திய மண்டல வழிகாட்டி செயற்கைகோள் (நேவிக்) அமைப்பின் அணு கடிகாரம் செயலிழந்துப் போனதால், செயற்கைக் கோள்களின் செயல்பாடுகளில் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியிருக்கிறது.

ஐஆர்என்எஸ்எஸ்–1எஃப் செயற்கைக் கோளின் அணு கடிகாரம் செயலிழந்துவிட்டதை, இஸ்ரோ கடந்த 13ஆம் தேதி அறிவித்திருந்தது.

நேவிக் செயற்கைக் கோளைக் கொண்டுதான், நாட்டில் உள்ள 8700 ரயில்கள் டிராக் செய்யும் பணி நடந்து வந்தது. இது 12 ஆயிரம் ரயில்களாக நீட்டிக்க இலக்கும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அது மட்டுமல்லாமல், பேரிடர் முன்னெச்சரிக்கை, கடல் பரப்பு வழிசெலுத்துதல், வாகனங்கள் எங்கிருக்கின்றன என்பதை டிராக் செய்யும் பணிகள் நடந்து வந்துள்ளன. தற்போது வெறும் மூன்று செயற்கைக் கோள்கள் மட்டுமே உள்ளன, அவையும் அபாயத்தில் உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

செயற்கைக் கோளுடன் இணைக்கப்பட்டிருந்த அந்த அணு கடிகாரம், 10 ஆண்டுகளுக்கும் மேலான தன்னடைய இடைவிடாத செயல்பாட்டை நிறுத்தியிருக்கிறது. ஆனால், இது விஞ்ஞானிகளுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்திய மண்டல வழிகாட்டி செயற்கைகோள் அமைப்பில் அடங்கிய நான்கு செயற்கைக் கோள்களில் ஒன்று முடங்கியதால், ராணுவ எல்லைகள், கடல் கண்காணிப்பு போன்ற பணிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால், இதுபோன்ற தரவுகளைப் பெற இந்தியா மீண்டும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் கலிலியோ செயற்கைக் கோள் தரவுகளை நாடும் கட்டாயம் ஏற்பட்டுள்ளது

மீண்டும் இந்த வாய்ப்பை இந்தியா பெற வேண்டும் என்றால், இஸ்ரோ இரண்டு புதிய செயற்கைக் கோள்களை ஏவும் நிலை ஏற்பட்டுள்ளது. ஐஆர்என்எஸ்எஸ் 1எஃப் செயற்கைக் கோள் ஏவப்பட்டதற்கு முழு முக்கிய காரணமே கார்கில் போர்தான்.

1999–ஆம் ஆண்டில், கார்கில் போரின்போது, இடத் தரவு உள்ளிட்ட விவரங்களை வழங்க அமெரிக்கா மறுத்து விட்டது. இந்த பின்னடைவு போரின்போது பாதுகாப்புப் படைக்கு மிகப்பெரிய சாவலாக இருந்தது. இதனால், இந்தியா தன்னுடைய தற்சார்பை உறுதி செய்ய நான்கு செயற்கைக் கோள்களைக் கொண்ட இந்திய மண்டல வழிகாட்டி செயற்கைகோள் அமைப்பை விண்வெளியில் நிலைநிறுத்தி செயல்படுத்தி வந்தது. தற்போது இந்தியாவின் உள்நாட்டு செயற்கைக்கோள் வழிசெலுத்துதல் அமைப்பில் இருந்த ஒரு செயற்கைக் கோளின் அணு கடிகாரம் செயலிழந்திருப்பதுதான் கவலையை ஏற்படுத்துகிறது.

இந்த செயற்கைக் கோள் அமைப்பின் மூலம், இயற்கைப் பேரிடர்கள், எல்லைப் பகுதிகளில் நடக்கும் ஊடுருவல், அண்டை நாடுகளில் பயங்கரவாத முகாம்கள் போன்றவற்றை இந்தியா கண்காணித்து உரிய நடவடிக்கைகள் எடுத்து வந்தன. ஆழ்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு இந்த செயற்கைக் கோள் உதவியுடன் செயல்படும் ஜிபிஎஸ் நேவிக் கருவிகளும் வழங்கப்பட்டு, அவர்களுக்கு இயற்கைப்பேரிடர்கள் குறித்து தகவல்கள் அளிக்கப்பட்டு வந்தன. இந்த செயற்கைக் கோள் அமைப்பின் மூலம் சாதாரண மனிதர்கள் பெற்ற வாய்ப்புகளும் ஏராளம்.

இந்தியா நேவிகேஷன் அமைப்பில், நான்கு செயற்கைக் கோள்களில் ஒன்று முடங்கியதால் மற்ற மூன்று செயற்கைக் கோள்களும் இயங்கும் என்றாலும், குறைந்தது 4 செயற்கைக் கோள்கள், சரியான நிலைகளில் நிலைநிறுத்தப்படுவது அவசியம் என்பதால், ஒரு செயற்கைக் கோள் செயலிழந்திருப்பது கவலைக்குரிய விஷயமாகவே கருதப்படுகிறது. செயற்கைக் கோள் அனுப்பும் தகவல்கள், நேரம், உயரம், தொலைவு என பல விவரங்களையும் ஒன்றிணைத்து வழங்கப்படும். எனவே, ஒரிடத்தின் துல்லியத்தன்மையை அறிய மூன்று செயற்கைக் கோள்கள் அனுப்பும் விவரங்கள் சரிபார்க்கப்படும். தற்போது இரண்டு செயற்கைக் கோள்களின் தரவுகள் மட்டுமே கிடைக்கும் என்பதால் சவாலாக மாறியுள்ளது என்று கூறப்படுகிறது.

செய்திகள் உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## உளுந்தூர்பேட்டை அருகே எறையூர் பகுதியில்
# காரில் எடுத்துச் செல்லப்பட்ட ரூ.95 ஆயிரத்து 500 ரொக்க பணம் பறிமுதல் செய்துள்ளனர்




கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை தொகுதிக்கு உட்பட்ட எறையூர் பகுதியில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் நடத்திய வாகன சோதனையில் உரிய ஆவணம் இன்றி காரின் எடுத்துச் செல்லப்பட்ட 95 ஆயிரத்து 500 ரூபாய் ரொக்க பணத்தை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்

ஆந்திர மாநிலத்தில் சேர்ந்த சிவ பிரசாத் ரெட்டி என்பவர் தஞ்சாவூர் ராகு கேது கோயில் செலவிற்காக காரில் எடுத்துச் செல்லும்போது தேர்தல் பறக்கும் படையினர் 95 ஆயிரத்து 500 ரூபாய் ரொக்க பணம் பறிமுதல் செய்து தேர்தல் நடத்தும் அலுவலர் செந்தில்குமார் உதவி அலுவலர் பாலசுப்பிரமணியன் ஒப்படைத்தனர்.



வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்டம் வேளாளர் மகளிர் கல்லூரி வளாகத்தில் "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டிருந்த செல்பி பாயிண்ட்டில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (18.03.2026) கல்லூரி மாணவியர்கள் மற்றும் அலுவலர்களுடன் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

# ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில் 15வது மாதமாக 1500 க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம்




ஈரோடு தாளவாடி தலைமலை தொட்டபுரம் ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சேவா அறக்கட்டளை மற்றும் ஈரோடு தினசரி காய்கறி சந்தை நண்பர்கள் இணைந்து, கடந்த இரண்டு வருடமாக தங்களது சேவையைத் தொடர்ந்துள்ளனர். ஈரோடு நேதாஜி காய்கறி சந்தையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக, 15-வது மாதமாகச் சிறப்பு அன்னதானம் நடைபெற்றது.

இந்தநிகழ்விற்கு முன்னிலை ஓசை பெரியசாமி தக்காளி மண்டி, சிறப்பு அழைப்பாளர்கள் சந்தானமூர்த்தி ஸ்ரீ சிட் பண்ட்ஸ் உரிமையாளர், கணபதி பைப்ஸ் உரிமையாளர் மோகன் மற்றும் கோவில் அறங்காவலர்கள் அன்னதான கமிட்டியின் நிர்வாகிகள், மகளிர் அணியினர் கலந்துகொண்டு 1500-க்கும் மேற்பட்ட குழந்தைகள், பெரியவர்கள், முதியோர்களுக்கு உணவை வழங்கினர்.

இதனைத் தொடர்ந்து, ஸ்ரீ ருத்ர ஜெய வீர ஆஞ்சநேயர் திருக்கோவில் சார்பாக ஈரோடு கொங்கலம்மன் கோவில் வீதியிலும் சுமார் 600 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# ஓடும் காரில் திடீர் தீ விபத்து



வேலூர்: சிஎம்சி ரவுண்டானா அருகே சாலையில் சென்றுக் கொண்டிருந்த காரில் திடீர் தீ விபத்து ஏற்பட்டது. காரில் இருந்த தம்பதி அதிர்ஷடவசமாக உயிர் தப்பினர். வேலூர் மாவட்டம், காட்பாடியை அடுத்துள்ள கரசமங்கலம் பகுதியைச் சேர்ந்தவர் தமீம் அன்சாரி (வயது 33). இவர் டிராவல்ஸ் ஏஜென்சியை நடத்தி வருகிறார். இவர் நேற்று (மார்ச் 17) இரவு மனைவி ஷமினாவுடன் காரில் வேலூர் நோக்கிச் சென்றுக் கொண்டிருந்தார். அப்போது, அவர்களின் கார் சிஎம்சி ரவுண்டானா அருகே உள்ள பேலஸ் கஃபே எதிரில் வந்துக்கொண்டிருந்தது. காரின் முன்பகுதியில் திடீரென புகை வருவதை கவனித்த தமீம் அன்சாரி, சாலையிலேயே காரை உடனடியாக நிறுத்தி விட்டு மனைவியுடன் காரில் இருந்து வெளியேறினார்.



வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்டம் வேளாளர் மகளிர் கல்லூரி வளாகத்தில "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு உறுதிமொழியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (18.03.2026) மாணவ/மாணவியர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

# உலக சாதனை படைத்த ஏழு வயது ஹைபர் ஆக்டிவிட்டி குழந்தை

## ஹைப்பர் ஆக்டிவிட்டி குழந்தைகளை நாலு சுவற்றிற்குள் வைக்காமல் சாதிக்க வைக்க வேண்டுமென பெற்றோர் நெகிழ்ச்சி பேட்டி




கூடுவாஞ்சேரியை சேர்ந்தவர் ராஜ்குமார் அவரது மனைவி கவிதா இவர்களின் மகள் தார்ணிகா ஹைபர் ஆக்டிவிட்டி குழந்தை என்பதை மூன்று வயதில் கண்டுபிடித்துள்ளனர் அவருக்கு மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்டு வரும் நிலையிலும் அதற்கான பள்ளியில் இரண்டாம் எல் கே ஜி படித்து வருகிறார்.

இந்த நிலையில் சொந்த ஊரான தஞ்சாவூர் மாவட்டத்திற்கு செல்லும் பொழுது கிணறு ஏரிகளில் அதிக நேரம் தண்ணீரில் நீந்தி குளிப்பதில் ஆர்வமாக தார்னிகா இருந்ததால் இதுபோன்று ஹைபர் ஆக்டிவிட்டி குழந்தைகளை வீட்டிலேயே வைத்து நான்கு சுகத்திற்குள் அடைக்காமல் ஏதாவது சாதனை படைக்க வைக்க வேண்டும் என்ற எண்ணம் தார்னிகாவின் தாயான கவிதாவிற்கு இருந்து வந்துள்ளது இதன் காரணமாக தாம்பரம் பகுதியில் உள்ள நீச்சல் பயிற்சி மையத்தில் நீச்சல் பயிற்சி அளிக்கப்பட்டது..

அதனைத் தொடர்ந்து குளோபல் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் நிறுவனத்தை தொடர்பு கொண்டு உலக சாதனைபடைக்கமுயற்சி செய்துள்ளனர் தாரணிகாவின் திறமையை பார்த்த அவர்கள் 170 மீட்டர் நீளம் ஒரே மூச்சில் நீந்தி சென்று ஹைப்பர் ஆக்டிவிட்டி 7 வயது குழந்தையான தாரணிகா உலக சாதனை படைத்தார்.

இதனை அங்கீகரித்து குளோபல் புக் ஆஃப் ரெகார்ட் நிறுவனம் மெடல் மற்றும் சான்றிதழ்களை வழங்கி பாராட்டியது.



மதுரை தெற்கு சித்திரை வீதியில் உள்ள கே வி கே ராஜேந்திர பிரபு பவனத்தில் மாந்தோப்பு தேச கவர பலிஜ ஏழூர் உறவின்முறை மகாஜன சபை முன்னாள் தலைவர் கே வி கே ராஜேந்திர பிரபு 17ம் நினைவு தினத்தை முன்னிட்டு கே வி கே ராஜேந்திர பிரபு திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது . இதனை தொடர்ந்து தானப்பா முதலில் தெருவில் உள்ள பெட் கிராஃப்ட் முதியோர் இல்லத்தில் முதியோர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.தொடர்ந்து தெற்கு சித்திரை வீதியில் பக்தர்கள் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.இந்நிகழ்வில் ஜெயபிரபா ஜூவல்லர்ஸ் உரிமையாளர் பிரபாகரன் தனசேகரன் உபதலைவர் மாதவதாஸ் நாகேஸ்வரன் பொருளாளர் பாஸ்கரன் மற்றும் தனபால் வில்லாபுரம் கார்த்திக் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# ஈரோடு மாவட்ட காவல் துறை அறிவிப்பு




நடைபெறவிருக்கும் 23.04.2026 ஆம் தேதி தமிழக சட்ட மன்ற தேர்தலில், ஈரோடு மாவட்டத்தில் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட விருப்பமுள்ள ஓய்வு பெற்ற 1. முன்னாள் இராணுவத்தினர், 2. ஓய்வு பெற்ற காவல் துறையினர், 3. ஓய்வு பெற்ற வனத்துறையினர், 4. ஓய்வு பெற்ற தீயணைப்பு பாதுகாப்பு படையினர், 5. ஓய்வு பெற்ற சிறைத்துறையினர் ஆகியோர்கள் தங்களது விருப்ப மனுவினை சரக காவல் துணைகண்காணிப்பாளர் அலுவலகத்திலோ அல்லது ஈரோடு மாவட்ட காவல் அலுவலகத்தில் இயங்கி வரும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி எண்களில் (0424 2250990 96552 20100) தகவல் தெரிவித்தும், பதிவு செய்து கொள்ள ஈரோடு மாவட்டகாவல்துறைகண்காணிப்பாளர்அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# நோன்பினையும் ஜக்காத்தினையும் நிறைவேற்றிய இஸ்லாமியர்கள் அனைவருக்கும் காயல் அப்பாஸ் ரமலான் வாழ்த்து



நோன்பினையும் ஜக்காத்தினையும் நிறைவேற்றிய இஸ்லாமியர்கள் அனைவருக்கும் காயல் அப்பாஸ் ரமலான் வாழ்த்து இது குறித்து மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சியின் மாநில தலைவர் காயல் அப்பாஸ் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தில் கூறியிருப்பதாவது.

புனித ரமலான் மாதம் என்பது இஸ்லாமியர்களுக்காக ஏக இறைவனான அல்லாஹுதாலாவினால் வழங்கப்பட்ட மிகப் பெரிய வெகுமதியாகும்.

ஆண்டு முழுவதும் ரமலானாகவே இருக்க வேண்டும் என உம்மத்தினர் விரும்புவார்கள் என ஓர் ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய சிறப்பு வாய்ந்த மாதம் ரமலான்.

ஆண்டு முழுவதும் நோன்பு நோற்பது சிரமமான காரியம்தான் என்றாலும், புனித ரமலான் மாதத்தில் கிடைக்கின்ற நன்மைகளைக் கருத்தில் கொண்டு மனிதர்கள் அதனை விரும்புவார்கள் என்பதாக முகமது நபி(ஸல்) அவர்கள் அருளியிருக்கின்றார்கள்.ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பதும்...ஒவ்வொருமாதமும் மூன்று நோன்புகள் நோற்பதும் உள்ளத்தின் அழுக்குகளையும் , மன ஊசலாட்டங்களையும், நீக்கி விடும் என ஓர் ஹதீஸில் அறிவிக்கப்பட்டுள்ளது.

நோன்பினுள் பலவிதமான நோக்கங்களும், பலன்களும், இருக்கின்றன. மார்க்கம் நோன்பை விதியாக்கி இருப்பதில் பலவிதமான பலன்கள் மனிதனுக்கு கிடைக்க வேண்டுமென்பதுதான் நோக்கம். அவை அனைத்தும் நோன்பில் பசித்திருக்கும் பொழுதுதான் கிடைக்கப் பெறுகின்றன.

அவற்றில் மிகப் பெரிய பலனாகிய மனோ இச்சயை முறியடித்தல் என்பது சிறிது நேரம் பசித்திருப்பதில் அடங்கியிருக்கிறது. ஷைத்தான் மனிதனின் உடலில் ரத்தம்போன்று ஊடுருவிசென்றுகொண்டிருக்கிறான். நோன்பு கேடயமாகி ஷைத்தானின் செயல்களில் இருந்து தடுக்கும். நோன்பினால் மற்றொரு பலன் என்னவென்றால் ஏழைகள்போல் பசித்திருந்து அவர்களுடைய நிலைகளை உணர்வதாகும்.

இந்த நோக்கம், மாலை வரை பசி தெரியாமல் இருக்க ஸஹர் நேரத்தில் பால் இனிப்பு வகைகள் ஆகாரங்கள் ஆகியவற்றைக் கொண்டு குடலை நிரப்பாமல் இருப்பதில்தான் உண்டாக முடியும். ஏழைகளுக்கு ஒப்பாக இருத்தல் என்பது கொஞ்சம் நேரம் பசித்திருப்பதின் மூலமே சாத்தியமாகும்.

ஆகவே, இந்த புனிதமான ரமலான் மாதத்தில் மார்க்கத்தைக் கொண்டு நாம் நோற்ற இந்த நோன்பினையும் ஜக்காத்தினையும் நிறைவேற்றிய இஸ்லாமியர்கள் அனைவருக்கும் இனிய ரமலான் நல் வாழ்த்துகளை மக்கள் எழுச்சி ஜனநாயக கட்சி சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# தூத்துக்குடி பட்டினமருதூரில் அகழாய்வு பணிகள் தொடக்கம் தமிழ்நாடு தொல்லியல் வரலாற்றில் புதிய மைல் கல்



தூத்துக்குடி: பட்டினமருதூரில் அறிவிக்கப்பட்டுள்ள தொல்லியல் தலத்தில் முதல்கட்ட அகழாய்வு பணிகள் அதிகாரப்பூர்வமாக தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு அரசின் 2025-26 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில் இந்தப் பகுதி தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த தளமாக அறிவிக்கப்பட்டு, தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்திய தொல்லியல் துறையின் (ASI) முறையான அனுமதியுடன் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த அகழாய்வு பணிகளை, தள இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ள தொல்லியல் நிபுணர் அஜய்குமார் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

முதற்கட்டமாக சர்வே எண் 40/1 பகுதியில் அறிவியல் முறையில் குறியிடப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டு, சுமார் 20 மீட்டர் × 10 மீட்டர் பரப்பளவில் அகழாய்வு குழி அமைக்கப்பட்டுள்ளது. அங்கு துல்லியமான முறையில் மண் அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பட்டினமருதூர் பகுதி, பண்டைய காலங்களில் "கீழ்பட்டினம்" என அழைக்கப்பட்டு, முக்கிய வணிக மையமாக விளங்கியிருக்கலாம் என்ற வரலாற்று கருதுகோள் தொல்லியல் ஆய்வாளர்களிடையே நிலவுகிறது. இதற்கு ஆதாரமாக, இதுவரை மேற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது பல்வேறு பழமையான மண்பானைகள், குடுவைகள், சிறுபொருட்கள் போன்றவை கண்டெடுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. இவை அந்தப் பகுதியின் தொன்மை மற்றும் வர்த்தக செயல்பாடுகளை சுட்டிக் காட்டும் ஆரம்ப சான்றுகளாக கருதப்படுகின்றன.

இந்நிலையில் தற்போது தொடங்கியுள்ள அகழாய்வு பணிகள் மூலம், இந்தத் தளத்தின் உண்மையான காலக்கட்டம் (Timeline) அறிவியல் ரீதியாக நிரூபிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், அகழாய்வில் கிடைக்கும் தொல்பொருட்கள் மூலம் அப்பகுதியின் வாழ்வியல் முறை, வர்த்தக உறவுகள், கடல் வாணிகச் செயல்பாடுகள், கலாசார பரிமாற்றங்கள் போன்ற பல்வேறு அம்சங்கள் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது.

# இப்தார் விழாவில் வரும் தேர்தலில் 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம்; அமைச்சர் கீதா ஜீவன் பேச்சு



இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தூத்துக்குடி மாநகர் மாவட்ட சிறுபான்மை பிரிவு சார்பில் ரமலான் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி தூத்துக்குடி எட்டயபுரம் சாலையில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது.

மத நல்லிணக்க இஃப்தார்நோன்புநிகழ்ச்சிக்கு தூத்துக்குடி மாநகர் மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் மைதீன் தலைமை வகித்தார்.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட திமுக செயலாளரும் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு நோன்பு திறக்கும் நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்து அமைச்சர் கீதாஜீவன் பேசுகையில்; மத நல்லிணக்கத்தை பேணிகாக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்துள்ளோம். தமிழகத்தில் அனைத்து தரப்பினரும் சகோதரத்துவத்துடன் ஒரு தாய் மக்களாக பழகி வருகிறோம். இந்த அமைதியை ஒற்றுமையை சீர்குலைப்பதற்கு என பிற மாநிலங்களில் குழப்பத்தை ஏற்படுத்தியதை போல் தமிழ்நாட்டிற்கு ஒவ்வாத ஒரு கூட்டணியை அமைத்து கொண்டு அமைதி பூங்காவான தமிழ்நாட்டில் கால் வைத்து விடலாம் என்ற சூழ்ச்சி செய்து வருகின்றனர். அவர்களுக்கு மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் சார்பில் தளபதியார் ஸ்டாலின் வழியில் சரியான பாடம் புகட்ட வேண்டும். தமிழ்நாட்டில் மட்டும்தான் எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிட மாடல் ஆட்சியின் நன்மைகள் அனைவருக்கும் கிடைக்கிறது. ஒவ்வொருவரும் தங்கள் விரும்பும் மதத்தை சுதந்திரமாக பின்பற்றலாம் அதற்கு எந்த தடையும் கிடையாது. இதைத்தான் உண்ண வேண்டும், இதைத்தான் உடுத்த வேண்டும், குறிப்பிட்ட கொள்கையை தான் பின்பற்ற வேண்டும் என்று சுதந்திர இந்தியாவில் கட்டாய திணிப்பை செய்கிறது பிஜேபி. தமிழ்நாட்டில் எல்லா மதத்தையும் மதிக்கிறோம். மத வெறியை எதிர்கிறோம். எந்த சூழ்நிலையிலும் சிறுபான்மை மக்களுக்கு பாதுகாப்பாக திமுக இருக்கும். இளைஞர்கள் முதல் பெண்கள், முதியவர்கள் வரை அனைவரையும் அரவணைத்து ஒற்றுமையாக களப்பணியாற்றி 200 தொகுதி என்ற முதலமைச்சரின் இலக்கையும்தாண்டி 234 தொகுதிகளிலும் வெற்றி பெறுவோம் அதற்கு அனைவரும் தயாராக வேண்டும் என்று அமைச்சர் கீதாஜீவன் பேசினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ. டேனியல்ராஜ், திமுக வடக்கு மாவட்ட அவைத் தலைவர் செல்வராஜ், மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்மோகன் செல்வின், மாநகர திமுக செயலாளர் ஆனந்தசேகரன், மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் சகாயராஜ், முன்னாள் மாவட்ட தலைவர் முரளிதரன், மண்டல தலைவர் எஸ். பி.ராஜன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாவட்ட தலைவர் மீராசா, எஸ்டிபிஐ கட்சி மாவட்ட துணை தலைவர் மைதீன்கனி, மனித நேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் யூசுப், சமத்துவ மக்கள் கழக மாவட்ட செயலாளர் அற்புதராஜ், மதிமுக நக்கீரர், பேச்சிராஜ், பொன்ராஜ், திமுக மாநகர இலக்கிய அணி அமைப்பாளர் ஜீவன் ஜேக்கப், காங்கிரஸ் நிர்வாகிகள் கவுன்சிலர் எடின்டா,மண்டலதலைவர் எஸ்.பி.ராஜன், பிரபாகரன், நாராயணசாமி, பெருமாள் கோவில் அறங்காவலர் குழு தலைவர் செந்தில்குமார், மற்றும் மணி, உள்பட பல்வேறு அமைப்பை சேர்ந்தவர்கள் இப்தார் நோன்பில் கலந்து கொண்டனர்.

# ஆதியும் அந்தமும் ஆனவன் இறைவன்



"ஓம் ஸ்ரீ மகாலட்சுமி தாயே நமக"
" ஓம் ஸ்ரீ மகாலட்சுமி குருவே நமக"

விடிய விடியப் பேசினாலும் பரவாயில்லை, மனிதனுக்கு விடியலக் காட்ட வேண்டும். காலந்தோறும் கதை சொல்லி காலத்தை ஓட்ட முடியாது. காலம் உன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறது.

நடிப்பு என்பது ஒரு அளவுக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அளவுக்கு மீறினால், இறைவன் நடிக்கஆரம்பித்தால்மனிதன்காலி.

மக்களுக்குவழிகாட்டு.கதையும் சொல். ஆனால் கதையில் கரு இருக்க வேண்டும்.

பொய் பரவும், ஆனால் பொசுங்கி விடும். உண்மை உள்வாங்கும். அது ஒளிவிடும்போது மனிதன் தாங்க மாட்டான்.

சூழ்ச்சி சில நாள் வெல்லும். சில வழியில் கொன்றும் விடும். உண்மையைப் புரிந்து கொள் மனிதா.

நீ புகழுக்கு மயங்காதே. அன்புக்கு இடம்கொடு.என்றும்பூமியில்நிலைத்து நிற்பாய்.

உள்ளத்தில் விஷத்தை வைத்துக்கொண்டு, மற்றவரிடத்தில் பூப்போன்று பேசுகிறாயே.அது எப்படி? இறைவன் படைப்பில் அனைவரையும் நல்லவனாய் தான் படைக்கின்றார். கெட்டவனாவதும் நல்லவனாவதும் அவனுடைய பழக்கவழக்கமே. கெட்டவன் மனம் திருந்தினால் அங்கு இறைவன் இருப்பான்.

ஆதியும் அந்தமும் ஆனவன் இறைவன். அவன் யாரையும் வெறுப்பதும் இல்லை, ஒதுக்குவதுமில்லை. கெட்டவன் என்றும் நல்லவன் என்றும் பார்ப்பதுமில்லை. அவரவர் செய்த வினையை அவரவர் அனுபவிக்கிறார்கள். நேரம் வரும்போது அவரைத் தேடுவார்கள். அப்பொழுது விமோசனம் கொடுப்பார் இறைவன்.

காற்றில், நீரில், நெருப்பில் கலந்து விட்டார் கல்கி. கணுக்கால் எலும்பு, முழங்கால் புல்லு நடக்கப் போகுது. இது உறுதி. மனிதன் திருந்த மாட்டான். திருத்துவதற்காக இந்த பூமியில் நான் வரவில்லை. எல்லாம் நல்லபடியாக வாழ வேண்டும் மக்கள் என்று நான் நினைக்கின்றேன். யாரையும் குறை கூற வரவில்லை. அதர்மம் அழியும். இறைவன் எங்கே என்று உணர்ந்து சரணாகதி அடைகிறானோ அவன் காக்கப்படுவான். இறைவன் என்பவன் இயற்கை என்று புரிந்து கொண்டு வாழ்பவன் மனிதன்.

சுயநலத்துக்காக எந்தச் செயலைச் செய்தாலும் வெல்லாது. நேர்மையே வெல்லும். இது சத்தியம்.

" வாழ்க சத்தியம்"
" ஜெயிப்பது நிச்சயம் "



ஈரோடு மாவட்டம் சென்னிமலை நெசவாளர் காலனியைச் சேர்ந்த 71 வயது முதியவர் துரைசாமி, தனது ஓய்வு நேரத்தில் கைத்தறிப் போர்வையில் வண்ண நூல்களால் 10 திருக்குறள்களை நுணுக்கமாக வடிவமைத்து சாதனை படைத்துள்ளார். இந்த கலைப் படைப்பினை அவர் பசுவபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குப் பரிசாக வழங்கினார். இவரது இந்த நற்செயலையும், விடாமுயற்சியையும் அப்பகுதி மக்கள் வெகுவாகப் பாராட்டி வருகின்றனர்.



ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அருகே உள்ள பண்ணாரியில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஶ்ரீ பண்ணாரி அம்மன் கோவில் குண்டம் திருவிழா வரும் 31ஆம் தேதி நடைபெற உள்ளது. இதையொட்டி, அம்மன் உற்சவர் சப்பரம் சுற்றுவட்டார கிராமங்களில் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறது. அந்த வகையில், நேற்று சிக்கரசம்பாளையம் கிராமத்திற்கு வருகை தந்த சப்பரத்தைப் பொதுமக்கள் உற்சாகமாக வரவேற்று, சிறப்பு பூஜைகள் செய்து அம்மனை மனமுருகி வழிபட்டனர்.

# கோவில்பட்டி கடலை மிட்டாய்க்கு ஜிஎஸ்டியில் விலக்கு கிடைக்குமா? துரை வைகோ எம்பி கோரிக்கை



தூத்துக்குடி: கோவில்பட்டி கடலை மிட்டாய்க்கு ஜிஎஸ்டி-யில் இருந்து தற்காலிக தளர்வு அளிக்க வேண்டும்என மத்திய அமைச்சர் பியூஸ்கோயலிடம் மதிமுக எம்பி துரை வைகோ நேரில் கோரிக்கை விடுத்தார்.

திருநெல்வேலி அல்வா, ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவாபோல் கோவில்பட்டி கடலைமிட்டாய்யும் பிரசித்தி பெற்றது. நல்ல சுவை கொண்ட இந்த கடலை மிட்டாய் தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியா மற்றும் உலகம் முழுவதும் பல்வேறு நாடுகளில் பெயர் பெற்றது. கோவில்பட்டி சுற்று வட்டாரப் பகுதிகளில் 120-க்கும்மேற்பட்ட கடலைமிட்டாய்தயாரிப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. சிறு மற்றும் குறு தொழில்களாக நடைபெறும் கடலை மிட்டாய் தயாரிப்பில் கோவில்பட்டி மட்டுமல்லாமல் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 20,000-க்கும் மேற்பட்டதொழிலாளர்கள்பணியாற்றிவருகின்றனர். இந்த பகுதி மக்களின் மிக முக்கிய வாழ்வாதாரமாக தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்கு அடுத்தபடியாக கடலை மிட்டாய் தயாரிப்பகங்கள் உள்ளன.

கோவில்பட்டியில் தயாரிக்கப்படும் கடலை மிட்டாயில் 70 சதவீதம் வளைகுடா நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன. தற்போது இஸ்ரேல், ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே நடைபெற்று வரும் போர் காரணமாக கோவில்பட்டி கடலை மிட்டாய் ஏற்றுமதி முற்றிலுமாக பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் 2 கோடி ரூபாய் மதிப்பிலான கடலை மிட்டாய்கள் ஏற்றுமதியாகாமல் கப்பல்களில் தேங்கி நிற்கின்றன.

இந்த நிலையில், மதிமுக முதன்மை செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான துரை வைகோ, மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சர் பியூஷ்கோயலைநேற்றுமுன்தினம்நேரில்சந்தித்தார். அப்போது, கோவில்பட்டி கடலை மிட்டாய்க்கு ஜிஎஸ்டியில் இருந்து தற்காலிக தளர்வு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை மனு அளித்தார்.



தமிழகத்தில் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டுள்ளதால் தேர்தல் பறக்கும் படையினர் தமிழக முழுவதும் ரூபாய்.50,000/ ஆயிரத்துக்கும் மேல் ஆவணம் இல்லாமல் கொண்டு செல்லும் பணத்தை பறிமுதல் செய்து வருகின்றனர். அந்த வகையில் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்த பண்ணாரி சோதனை சாவடியில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். இந்த நிகழ்வில் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் ஜமுனா ராணி தலைமையில் தேர்தல் பிரிவு அதிகாரிகள் ஈடுபட்டனர்.




வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச. கந்தசாமி (17.03.2026) நேற்று ஈரோடு மாநகராட்சி அலுவலகவளாகத்தில் "வாக்களிப்பது உங்கள் உரிமை மற்றும் கடமை" வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு குறித்த பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். உடன் 98 ஈரோடு கிழக்கு சட்டமன்றத்தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/ ஆணையாளர் அர்பித்ஜெயின் , துணை ஆணையாளர் சரஸ்வதி, உதவி ஆணையர் (மண்டலம் 1 ) மோகனசுந்தரி உட்பட பலர் உள்ளனர்.

# சிலிண்டரை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை; எரிவாயுவை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும்



புதுடெல்லி: சிலிண்டர்களை பதுக்குவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணைச் செயலாளர் சுஜாதா சர்மா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது: மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள போரால் இந்தியாவில் எரிபொருள் நெருக்கடி கவலைக்குரிய விஷயமாகவே நீடிக்கிறது. எனினும், சமையல் எரிவாயு (எல் பிஜி) விநியோகம் தொடர்பாக பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லை. அதேநேரம் எரிவாயுவை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். மாற்றாக, சமையலுக்கு மின்சாரம் உள்ளிட்ட இதர எரிசக்தி ஆதாரங்களைப் பயன்படுத்துவது கூடுதல் நலம் பயக்கும்.

தற்போது எந்தவொரு விநியோகஸ்தரிடமும் கையிருப்பு இல்லாதநிலை ஏற்படவில்லை. வீடுகளுக்கான சிலிண்டர் விநியோகம் வழக்கம்போலவே நடைபெற்று வருகிறது. வணிக ரீதியிலானஎல்பிஜிவிநியோகம் தொடக்கத்தில் முழுமையாக நிறுத்தப்பட்டிருந்தாலும், தற்போது பகுதி அளவில் சீரமைக்கப்பட்டுள்ளது. வணிகப் பயன்பாட்டாளர்கள் படிப்படியாகக் குழாய் வழி இயற்கை எரிவாயுவுக்குமாறவேண்டும்.

எரிவாயு சிலிண்டர்களைப் பதுக்குபவர்கள் மற்றும் கறுப்புச் சந்தையில் விற்பனை செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த சில நாட்களில் நாடு முழுவதும் 12,000-க்கும் மேற்பட்ட சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இதில் சுமார் 15,000 சிலிண்டர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு சுஜாதா தெரிவித்தார்.

# திமுக அரசை கண்டித்து தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு ஆர்ப்பாட்டம்

விடியா திமுக அரசு பதவியேற்ற நாள் முதல் தமிழ்நாட்டில் தொடர்ந்து நடைபெற்று வரும் பாலியல் வன்கொடுமைகள் சட்டம் ஒழுங்கு சீர்கேடு போதைபொருட்கள் புழக்கம், விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த தவறிய திமுக அரசை கண்டித்து கழக பொதுச் செயலாளர் எடப்பாடியார் ஆணைக்கினங்க அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகள் சார்பில் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான செல்வமோகன்தாஸ்பாண்டியன், வடக்கு மாவட்ட கழக செயலாளரும் கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினருமான செ கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா ஆகியோரது தலைமையில் பாஜக மாவட்ட தலைவர் ஆனந்தன் அய்யாசாமி, மாநில செயலாளர் கதலி நரசிங்க பெருமாள், முன்னாள் மாவட்ட தலைவர்கள் ராம்ராஜ், தீனதயாளன் பொருளாளர் கோதை மாரியப்பன், அமமுக வடக்கு மாவட்ட செயலாளர் கற்பகம் குருநாதன், தெற்கு மாவட்ட செயலாளர் அருணகிரிசாமி, பாமக வடக்கு மாவட்ட செயலாளர் சீதாராமன் தெற்கு மாவட்ட செயலாளர் இசக்கிமுத்து, தமாக மத்திய மாவட்ட தலைவர் அய்யாத்துரை வடக்கு மாவட்ட தலைவர் கென்னடி தமமுக வடக்கு மாவட்ட செயலாளர் கனிபாண்டியன் மாவட்ட தலைவர் தவம், தெற்கு மாவட்ட செயலாளர் கணேச பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது, கழக அமைப்பு செயலாளர் பி ஜி ராஜேந்திரன், கழக மகளிரணி துணை செயலாளரும் முன்னாள் அமைச்சருமான வி எம் ராஜலெட்சுமி, ஆகியோர் கண்டன உரையாற்றினர் பாஜக நகர தலைவர் சங்கரசுப்பிரமணியன் வரவேற்று பேசினார் அதிமுக நகர கழக செயலாளர் சுடலை நன்றி தெரிவித்தார்



ஆர்ப்பாட்டத்தில் பேசியவர்கள் ; தமிழக அரசின் நிர்வாக திறமையின்மையால் நாள் தோறும் நடைபெறும் பாலியல் வன்கொடுமைகளை தடுக்க முடியாமலும், சட்டம் ஒழுங்கை காப்பாற்ற முடியாமல் திணறி வருவதாகவும், விண்ணை முட்டும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த முடியாத விடியா திமுக அரசை கண்டித்தும் இந்த அவலங்களுக்குமுற்றுப்புள்ளி வைத்திட அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக அமர்ந்தால் முடியும் என்றும் அதற்காக கூட்டணி கட்சியினர் ஒன்றினைந்து அயராது பாடுபடுவோம் என்று பேசினார். கழக அண்ணா தொழிற்சங்க பேரவை துணை செயலாளர் கந்தசாமி பாண்டியன், தெற்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் கே ஆர் பி பிரபாகரன், திருநெல்வேலி மண்டலதகவல் தொழில்நுட்பபிரிவு செயலாளர் முனைவர் சிவ ஆனந்த், மாவட்ட கழக அவைத்தலைவர்கள் சண்முகசுந்தரம், வி பி மூர்த்தி இணை செயலாளர் சண்முகப்ரியா, துணை செயலாளர்கள் பொய்கை சோ மாரியப்பன், சகுந்தலா, பொருளாளர்கள் சாமிநாத பாண்டியன், சண்முகையா மற்றும் அனைத்து கட்சி சார்பு அணி மாவட்ட செயலாளர்கள், தலைவர்கள், ஒன்றிய நகர பேரூர் தலைவர்கள் செயலாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடியில் பிரையண்ட்நகர் சிதம்பரம் நகர் வியாபாரிகள் நலச்சங்கத்தின் அலுவலகம் திறப்பு விழாவில் அமைச்சர் கீதாஜீவன் பங்கேற்பு



தூத்துக்குடி பிரையண்ட்நகர் சிதம்பரம் நகர்வியாபாரிகள் நலச்சங்கம் அலுவலகம் திறப்பு விழா மற்றும் பொதுக்குழு கூட்டம் இன்று பிரையண்ட்நகர் 2வது தெருவில் உள்ள O.M.M மஹால் முதல் மாடியில் சங்கத்தின் அலுவலகம் திறப்பு விழா வியாபாரிகள் சங்கத் தலைவர் ஞானசெல்வன் தலைமையில் பொதுச்செயலாளர் பொன்ராஜ், முதன்மை துணைத் தலைவர் அழகு மந்திரி, பொருளாளர் பட்டாணி முத்து, முதன்மை கூடுதல் செயலாளர் ஜான் ஸ்டீபன் முன்னிலையில் நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராக சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதாஜீவன் சங்கத்தை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

சிறப்பு அழைப்பாளர் திருமணிராஜா, மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ரூபஸ் அமிர்தராஜ் கலந்து கொண்டார்.

விழாவில் தொடர்ந்து பொதுக்குழு கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுப்பது குறித்து மற்றும் சங்கத்தின் வளர்ச்சி தொடர்பாகவும். வணிகர்தின மாநாடு செல்வது குறித்தும் மேலும் சங்கத் தலைவரால் கொண்டுவரப்படும் இதர திட்டங்கள் சிறப்பாக வழிநடத்தத்தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் போன்ற பொறுப்புகளை முறையாகத் தேர்வு செய்வது குறித்த ஆலோசனை வழங்கினர்.

இந்நிகழ்வில் ஒருங்கிணைப்பாளர் கணேசன், செய்தி தொடர்பாளர் ஜெய்சிங், கௌதம், நிர்மல் சரவணகுமார், சிவில்ராஜ், மகளிர் அணி மாணிக்கராணி, பிரம்மசக்தி, ஜான்சிராணி, தனலட்சுமி மற்றும் வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் திமுக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026 முன்னிட்டு மதுரை மாவட்டம், திருமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் "சபாநாயகி" என்ற கதாபாத்திரத்தின் வாயிலாக பொதுமக்களிடையே தேர்தல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மாணவ மாணவிகளின் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ரங்கோலி கோலத்தை பார்வையிட்டு, 100% வாக்களிப்போம் உறுதிமொழி எடுத்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி பாராட்டினார்



வருகின்ற 23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (17.03.2026) அன்று ஈரோடு மாநகராட்சி அலுவலக வளாகத்தில் செயல்பட்டு வரும் தேர்தல் கட்டுப்பாட்டு மையத்தினை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் 98 ஈரோடு கிழக்கு சட்டமன்றத்தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/ஆணையாளர் அர்பித்ஜெயின் உட்பட பலர் உள்ளனர்.

# ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் எஸ்.ஆர்.இ.சி. இன்னோவேட் 2026 இண்டஸ்ட்ரி ஹேக்கத்தான் மற்றும் ப்ரோஜக்ட் எக்ஸ்போ நடைபெற்றது




கோவை துடியலூர் அடுத்துள்ள வட்டமலைபாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் எஸ். ஆர்.இ.சி இன்னோவேட் 2026 - இண்டஸ்ட்ரி ஹேக்கத்தான், ப்ரோஜக்ட் எக்ஸ்போ நடைபெற்றது. இதில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

கோவை துடியலூர் அடுத்துள்ள வட்டமலைபாளையம் ஸ்ரீ ராமகிருஷ்ணா பொறியியல் கல்லூரியில் எஸ். ஆர்.இ.சி இன்னோவேட் 2026 என்ற இண்டஸ்ட்ரி ஹேக்கத்தான், ப்ரோஜக்ட் எக்ஸ்போ நடைபெற்றது. இதில் "தொழில்துறை-கல்வித்துறை கூட்டாண்மை மூலம் திறன் இடைவெளியைக் குறைத்தல்" என்ற தலைப்பிலான பேனல் டிஸ்கசனும் நடைபெற்றது.

இதற்கு கல்லூரியின் முதல்வர் டாக்டர். சௌந்தரராஜன் தலைமை தாங்கி தொழில்துறை-கல்வித்துறை ஒத்துழைப்பின் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

நடைபெறும் போட்டிகளை மதிப்பீடு செய்ய ஜெப்டோ லாஜிக் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இணைநிறுவனர் சுரேஷ் குப்புசாமி, ஹிரோடெக் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் துணைத் தலைவர் கீத் நாராயணன், இண்டோ ஷெல் காஸ்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இணைத்துணைத்தலைவர் டாக்டர்.சரவணன், சிர்கோர் நிறுவனத்தின் செயல்பாட்டுச் செயல்முறைச் சிறப்பு இயக்குநர் ராம்ஜி சேதுராமலிங்கம், ஈஎல்ஜி எக்யூப்மென்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தயாரிப்புச் சிறப்பு மற்றும் புத்தாக்க மூத்த இயக்குநர் காளிமுத்து மற்றும் ரூட்ஸ் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மூத்த தகவல் தொழில்நுட்ப மேலாளர் அரியநாயகம் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களைச் சேர்ந்த தொழில் வல்லுநர்கள் கலந்துக்கொண்டு தொடக்கவுரையை நிகழ்த்தினர்.

தொடர்ந்து நடைபெற்ற போட்டிகளில்630மாணவர்கள் பங்கேற்றனர். இதில் 100 அணிகள் இண்டஸ்ட்ரி ஹேக்கத்தானிலும், 86 அணிகள் ப்ராஜெக்ட் எக்ஸ்போவிலும் தங்கள் திட்டங்களைச் சமர்ப்பித்தனர். இதற்காக கலந்துக்கொண்ட தொழில் வல்லுநர்கள், பங்கேற்ற அணிகளுக்கு நடுவர் குழு உறுப்பினர்களாகவும் வழிகாட்டிகளாகவும் பணியாற்றி, மாணவர்களின் முடிவுகளை மதிப்பீடு செய்தனர். இதன்மூலம் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, படிக்கும் காலத்திலேயே மாணவர்கள் தங்கள் தொழில்நுட்பப் படைப்பாற்றலை வெளிப்படுத்தவும், சக மாணவர்களுடன் இணைந்து பணியாற்றவும், தொழில்துறை வல்லுநர்களிடமிருந்து நுண்ணறிவுகளைப் பெறவும் வாய்ப்பு பெற்றனர்.

அதன் பின்னர் இண்டஸ்ட்ரி ஹேக்கத்தானில் வெற்றி பெற்றவர்களுக்கு தொழில் வழிகாட்டுதல், உள்ளகப் பயிற்சி வாய்ப்புகள் மற்றும்தொடக்கநிதி வழங்கப்பட்டது. அதேபோல, ப்ராஜெக்ட் எக்ஸ்போவில் முதல் இடம் பிடித்த அணிகளுக்கு ரூ.10 ஆயிரமும், இரண்டாம் இடம் பிடித்த அணிகளுக்கு ரூ.5 ஆயிரமும் பரிசாக வழங்கப்பட்டது. சிறந்த வடிவமைப்பு, சிறந்த சமூகத் தாக்கம், சிறந்த புத்தாக்கம், மேலும் அனைத்திலும் சிறந்த அணி மற்றும் சிறந்த ஸ்டார்ட்அப் யோசனை ஆகியவற்றுக்கும் சிறப்பு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சிகளு க்கான ஏற்பாடுகளை கல்லூரியின் தொழில்துறை மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியோர் இணைந்து செய்திருந்தனர்.

# ஈரான் போர் தாக்கம்: தண்ணீர் பாட்டில் விலை அதிகரிப்பும், தட்டுப்பாடு அபாயமும்!



மேற்காசிய நாடுகளில் தீவிரமாகும் போர்ச் சூழல் காரணமாக தமிழகத்தில் தண்ணீர் பாட்டில்கள் விலை உயர்த்தப்பட்டுள்ளது.இதேநிலைநீடித்தால் கோடைக்காலத்தில் தண்ணீர் பாட்டில் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஈரானும் அமெரிக்க தளவாடங்களை குறிவைப்பதாக வளைகுடா நாடுகளின் மீது திடீர்தாக்குதலை மேற்கொண்டு வருகிறது.

போர் தொடங்கிய ஒரு சில நாட்களிலேயே இந்தியாவில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டது.குறிப்பாக,வணிகரீதியானகாஸ் சிலிண்டர்கள் கிடைப்பது குதிரைக்கொம்பாகிவிட்டது.

அடுத்ததாக,இதன்தாக்கம் பெட்ரோலிய பொருட்களின் மூலப்பொருட்களில் இருந்து தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் நாற்காலிகள், வாகனங்களுக்கான டயர்கள்,சிந்தடிக்சேலைகள், பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் பாட்டில்கள், அழகு சாதன பொருட்கள் உள்ளிட்ட 6,000-க்கும் மேற்பட்ட அத்தியாவசிய பொருட்களின் விலையை தாறுமாறாக உயர செய்துள்ளது.

கோடைக்காலம் துவங்கிய நிலையில் போர் தொடரும்பட்சத்தில்தண்ணீர் பாட்டில் விலையேற்றமும் தொடரும் என்று தமிழ்நாடு அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்தியாளர் சங்கத்தினர் அதிர்ச்சியை கூட்டுகின்றனர்.


போரின் காரணமாக, பிளாஸ்டிக் பாட்டில், பிளாஸ்டிக் மூடி, பிளாஸ்டிக் பேப்பர் ஆகிவற்றின் விலை சுமார் 40% அதிகமாக உயர்ந்துள்ளது. இதில், கண்ணாடி போன்ற மினுமினுப்பு தன்மை கொண்ட ஒரு கிலோ பிளாஸ்டிக் பாட்டில் (RESIN - PETE bottles - Polyethylene Terephthalate) விலை ரூ.105-ல் இருந்து ரூ.165 ஆக உயர்ந்துவிட்டது.

பிளாஸ்டிக் பாட்டில் மூடியின் (HDPE: High-Density Polyethylene) விலை ஒரு கிலோ ரூ.123-ல் இருந்து ரூ.210 ஆக உயர்ந்துவிட்டது. தனித்தனியாக உள்ள குடிநீர் பாட்டில்களை குறிப்பிட்ட எண்ணிக்கையில் இணைத்து தனித்தனி பெட்டிகளாக கட்டுவதற்கான பேக்கிங் பிளாஸ்டிக் பேப்பரின் (Low - density polyethylene (LDPE) ஒரு கிலோ விலை ரூ.140-ல் இருந்து ரூ.240 ஆக உயர்ந்துவிட்டது.

இவற்றின் விலையேற்றம் காரணமாக, இதுவரை ரூ.8-க்கு விற்பனை செய்யப்பட்டுவந்த 200 மில்லி லிட்டர் குடிநீர் பாட்டில் விலை இப்போது ரூ.10-க்கும், ரூ.10-க்கு விற்பனை செய்யப்பட்டுவந்த 300 மி.லி. குடிநீர் பாட்டில் ரூ.12-க்கும், ரூ.12-க்கு விற்பனை செய்யப்பட்டுவந்த 500 மி.லி. குடிநீர் பாட்டில் ரூ.16-க்கும், ரூ.20-க்கு விற்பனை செய்யப்பட்டுவந்த ஒரு லிட்டர் குடிநீர் பாட்டில் ரூ.25-க்கும், ரூ.30-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த 2 லிட்டர் குடிநீர் பாட்டில் ரூ.35-க்கும், ரூ.50-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

அதேபோ, 5 லிட்டர் குடிநீர் பாட்டில் ரூ.70-க்கும், மறுமுறை பயன்படுத்தப்படும் கேன்களில் அடைக்கப்பட்ட 20 லிட்டர் குடிநீர் ரூ.45-ல் இருந்து ரூ.55-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# இளைஞர் காரில் கொண்டு சென்ற 12 கிலோ வெள்ளிப் பொருட்கள் பறிமுதல் பறக்கும் படை அதிரடி




சென்னை : சேப்பாக்கத்தில் சுமார் 12 கிலோ வெள்ளிப் பொருட்களை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வழங்கப்படுவதை தடுக்கதேர்தல் ஆணைய அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். அனைத்து மாவட்டங்களிலும்பறக்கும் படை, நிலைக் குழு மற்றும் கண்காணிப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு தீவிர வாகன சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தலைநகர் சென்னையில் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற சோதனைகளில் பல லட்சம் பணம் மற்றும் பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

சென்னை சேப்பாக்கம், திருவல்லிக்கேணி தொகுதிக்குட்பட்ட பகுதியான சுவாமி சிவானந்தா சாலையில், (மார்ச் 18) காலை தேர்தல் பறக்கும் படையினர் வாகன தணிக்கையில் ஈடுபட்டனர். அப்போது, ஆந்திரா பதிவெண் கொண்ட காரை மடக்கி சோதனை செய்தனர். இளைஞர் ஒருவர் ஓட்டி வந்த அந்த காருக்குள் 12.58 கிலோ மதிப்புள்ள வெள்ளி குத்து விளக்கு, தட்டு உள்ளிட்ட பொருட்கள் இருந்தன. மேலும், சுப நிகழ்ச்சிக்கு தேவையான பொருட்கள், இனிப்பு, காரம் ஆகியவையும் இருந்தன.

விசாரணையில், அந்த இளைஞர் ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த சதீஷ் என்பது தெரியவந்தது. உறவினரின் வளைகாப்பு நிகழ்ச்சிக்காக அவர் வெள்ளி மற்றும் இதர பொருட்களை கொண்டு செல்வதாக தெரிவித்தார். இருப்பினும், நகைகளுக்கான உரிய ஆவணங்கள் இல்லாததால், வெள்ளி பொருட்களை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் அவை ஒப்படைக்கப்பட்டது.

# டெல்லி அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து: 3 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழப்பு



புதுடெல்லி: டெல்லியில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 3 குழந்தைகள் உட்பட 9 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். டெல்லியில் பாலம் என்ற பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடத்தில் (மார்ச் 18) திடீரென தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இதில், 3 குழந்தைகள் உட்பட 9 பேர் உயிரிழந்திருப்பதாகவும், மேலும் மூவர் காயமடைந்ததாகவும் டெல்லி காவல் துறை தெரிவித்துள்ளது. தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர், நீண்ட போராட்டத்துக்குப் பிறகு தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். கட்டிடத்துக்குள் சிக்கியவர்களை அவர்கள் மீட்டனர். முழுமையான விசாரணைக்குப் பிறகே இந்த தீ விபத்துக்கான காரணம் தெரியவரும். முதல்வர் ரேகா குப்தா, இந்த தீ விபத்து குறித்து நீதித்துறை விசாரணைக்கு உத்தரவிட்டு உள்ளார்.

மேலும் தனது எக்ஸ் பக்கத்தில், குடியிருப்பு கட்டிடத்தில் ஏற்பட்ட துரதிர்ஷ்டவ சமான தீ விபத்து குறித்து அறிந்து மிகவும் மன உளைச்சலுக்கு ஆளானதாக பதிவிட்டுள்ளார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.